| தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களின் செயல்முறைகள் முன்னிலை - திரு.ஆர்.வெங்கடேஸ்வரன்,பி.காம்., | |
|---|---|
| ந.க.எண். 95/ 2018 / ந.1 | நாள். 26-06-2019 |

பொருள்- பணியமைப்பு - ஊரக வளர்ச்சி அலகு - தஞ்சாவூர் மாவட்டம் - தஞ்சாவூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் உதவி திட்ட அலுவலர் (உட்கட்டமைப்பு) ஆக பணிபுரிந்து-27.11.2017 அன்று- பணியிடையே காலமான அன்புதுரை (திரு) .A என்பவரது மகன் அசோக்(திரு).A-என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டது - இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்து ஆணையிடுதல்.

படிக்கப் பட்டவை-

1) தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 95/ 2018/ந1, நாள் 16-08-2018.

2) அரசாணை (4ப) எண்.18 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ.3) துறை நாள். 07-06-2019.

3) தொடர்புடைய ஆவணங்கள்.

-------------

<u>ஆணை</u>

தஞ்சாவூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் உதவி திட்ட அலுவலர் (உட்கட்டமைப்பு) ஆக பணிபுரிந்து 27.11.2017 அன்று பணியிடையே காலமான திரு.A.அன்புதுரை என்பவரின் வாரிசு மற்றும் மகன் திரு.A.அசோக் என்பவருக்கு முதலாவதாக படிக்கப்பட்ட மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி தஞ்சாவூர் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தஞ்சாவூர் உபகோட்டம் உதவிசெயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி) அலுவலகத்தில் பணிநியமனம் செய்யப்பட்டது. அதனைத்தொடர்ந்து, இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் இளநிலை உதவியாளர் நிலையில் 25-08-2018 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணையின் அடிப்படையில் தனியரின் பணியினை 25-08-2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்து இதன்வழி ஆணையிடப்படுகிறது.

2) பணிவரன்முறை செய்யப்பட்ட விபரம் தனியரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது என சான்றளிக்கப்படுகிறது.

26/6/19

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (வளர்ச்சி), தஞ்சாவூர்.

பெறுநர்
திரு.A.அசோக்
த/பெ. (லேட்) திரு.A..அன்புதுரை,
இளநிலை உதவியாளர்,
உதவிசெயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி) அலுவலகம்,
தஞ்சாவூர் உபகோட்டம்- உரிய வழியாக.

26/6/19

சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படை பணிநியமனம் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – தஞ்சாவூர் மாவட்டம் – காலஞ்சென்ற திரு.A.அன்புதுரை என்பவரின் மகன் திரு.A.அசோக், இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ3) துறை**

**அரசாணை (4ப) எண்.18** **நாள் : 07.06.2019**
**விகாரி, வைகாசி 24,**
**திருவள்ளுவர் ஆண்டு– 2050**

**படிக்கப்பட்டவை:**

1. தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் செயல்முறை ந.க.எண்.95/2018/ந.1, நாள் 16.08.2018.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், கடிதம் ந.க.எண்.65933/2018/டி2, நாள் 07.11.2018.

*****

**ஆணை:**

பணியில் இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கலாம் என்பதன் அடிப்படையில், தஞ்சாவூர் மாவட்டம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்தில் உதவி திட்ட அலுவலர் (உட்கட்டமைப்பு) ஆகப் பணியில் இருக்கும் போது 27.11.2017 அன்று காலமான திரு.A.அன்புதுரை என்பவரின் மகன் திரு.A.அசோக் என்பவருக்கு மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறையின்படி கருணை அடிப்படையில், தஞ்சாவூர் மாவட்டத்தில் இளநிலை உதவியாளராகத் தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, அத்தனியர் 25.08.2018 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருவதால், அன்னாரின் பணியை வரன்முறை செய்து ஆணையிடும்படி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். மறைந்த அரசு ஊழியர் தகுதிகாண் பருவம் முடித்த பணியாளர் என்றும், அவரது குடும்பம் வறிய நிலையில் இருந்தது என்றும், அவரது மகன் திரு.A.அசோக் கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 25.01.2018 அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த தேதி 31.07.1997 என்றும், அரசு ஊழியர் இறந்த நாளில் தனியரின் வயது 20 என்றும், பணி நியமன நாளில் தனியரின் வயது 21 என்றும், அவர் இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவருக்குப் பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை என்றும் தெரிவித்து மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசுக்கு முன்மொழிவு அனுப்பியுள்ளார்.

2. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018–ல் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணி வரன்முறை குறித்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

3. இந்நிலையில் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் முன்மொழிவு உரிய அசல் ஆவணங்களுடன் அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்படி, இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட திரு.A.அசோக் என்பவர் பணி நியமனத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், தஞ்சாவூர் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளர் பதவியில் 25.08.2018 முற்பகல் முதல் தனியரின் பணியினை அவர் அப்பணியிடத்திற்குரிய உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவை ஏதும் இருப்பின் அவற்றைப் பெற உரிய விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

4. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் 20.03.2019 ஆம் நாளிட்ட அலுவல் சாரா எண்.631/க்யூ–1/2019 மற்றும் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் அலுவல் சாரா எண்.10023/ஜி2/2019, நாள் 25.03.2019–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஹன்ஸ் ராஜ் வர்மா**
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

ந.க.எண்.95/18/ஈ1 மாவட்டஆட்சியரகம்
நாள்: 26.6.2019 தஞ்சாவூர்

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15.
மாவட்ட ஆட்சித் தலைவர், தஞ்சாவூர் மாவட்டம்.
மாநிலக் கணக்காயர், சென்னை – 18/35.
கருவூல மற்றும் கணக்குத் துறை ஆணையர், சென்னை–15
மாவட்ட கருவூல கணக்கு அலுவலர், தஞ்சாவூர் .

நகல் சார்ந்து செய்யப்படுகிறது.

பெறுதல்
திரு. A. அசோக்
த/பெ. A. அன்புசெல்வம் (லேட்)
இளநிலை உதவியாளர்
உதவி செயற்பொறியாளர்
(ஊ.வ) அலுவலகம்
தஞ்சாவூர் உபகோட்டம்.

**நகல்:**
திரு.A.அசோக், இளநிலை உதவியாளர்,
ஊரக வளர்ச்சிப் பிரிவு, தஞ்சாவூர் மாவட்டம்.
( வழி: தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர்.)
தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, சென்னை–9.
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை , சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதரி.

மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (வளர்ச்சி)
தஞ்சாவூர்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.